பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

07 04 2025 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. உடல் பருமனை குறைக்க ஆரோக்கியமான உணவு பழக்கத்தை அனைவரும் பின்பற்ற வேண்டுமென்று பிரதமர் திரு நரேந்திரமோடி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.
2. பிரதமரின் முத்ரா கடன் திட்டத்தின்கீழ் இதுவரை 52 கோடிக்கும் மேற்பட்ட கடன்கள் வழங்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
3. கடற்படை கமாண்டர்கள் மாநாட்டின் இரண்டாவது பகுதி இன்று புதுதில்லியில் தொடங்கியது.
4. மீனவர்களை ஊக்குவிக்கும் வகையில் மீன்களை பதப்படுத்துதல், உலர்த்துதல் உள்ளிட்ட தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மும்பை அணி - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

*--- இனி விரிவான செய்திகள் --*

**[]<<<>>>[]**

சுகாதார மேம்பாட்டில் மத்திய அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார தினம் இன்று கடைபிடிக்கப்படுவதையொட்டி, அவர் வெளியிட்டுள்ள காணொலி பதிவில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

வளமான சமூகத்திற்கு சுகாதாரமே அடிப்படை என்று தெரிவித்துள்ள பிரதமர், மக்களின் ஆரோக்கியம் சார்ந்த பல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

2050-ஆம் ஆண்டில் நாட்டில் 44 கோடி பேர் உடல் பருமனால் பாதிக்கப்படுவார்கள் என்று ஆய்வு ஒன்றில் தெரிய வந்திருப்பதாகவும், அதனை தடுக்கும் வகையில் ஆரோக்கியமான உணவு பழக்கத்தை அனைவரும் பின்பற்ற வேண்டுமென்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

ஒவ்வொருவரும் தமது உணவில் எண்ணெய் பயன்பாட்டை குறைந்தபட்சம் பத்து சதவீதமாவது குறைத்துக் கொள்ள வேண்டும் என்றும், ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஏற்படுத்த உடற்பயிற்சியை மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான பயணத்தில் சுகாதாரம் சார்ந்த முன்னெடுப்புகள் முக்கிய பங்கு வகிக்கும் என்றும் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்,

[]<<<>>>[]

மத்திய உள்துறை திரு அமித்ஷா ஜம்மு காஷ்மீரின் சட்டம் ஒழுங்கு நிலவரம் குறித்து இன்று ஆய்வு மேற்கொள்கிறார்.,

இக்கூட்டத்தில் மத்திய ஆயுத காவல்படையினர், ஜம்மு காஷ்மீர் காவல்துறை மற்றும் புலனாய்வு அமைப்புகளின் உயரதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், எல்லை தாண்டிய ஊடுருவல் தடுப்பு உள்ளிட்ட அம்சங்கள் குறித்து ஆய்வு செய்வதுடன், சர்வதேச எல்லைப் பகுதியையும் திரு அமித் ஷா நேரில் ஆய்வு செய்ய உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

[]<<<>>>[]

பிரதமரின் முத்ரா கடன் திட்டத்தின்கீழ் இதுவரை 52 கோடிக்கும் மேற்பட்ட கடன்கள் வழங்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான இந்த திட்டத்தின் கீழ் இது வரை 32 லட்சம் கோடி ரூபாய் கடனாக வழங்கப் பட்டிருப்பதாக அரசு கூறியுள்ளது.

இந்த கடன் திட்டத்தின் மூலமாக 70 சதவீத்திற்கும் மேற்பட்ட பெண் தொழில் முனைவோர் பயனடைந்திருப்பதாகவும், இது பாலின சமத்துவத்திற்கு வழி வகுத்திருப்பதகாவும் அரசு தெரிவித்துள்ளது.

அனைவரது வளர்ச்சியையும் உள்ளடக்கிய இந்த கடன் திட்டம் உலக அளவில் கவனத்தை ஈர்த்திருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

[]<<<>>>[]

ரிசர்வ் வங்கியின் 3 நாள் நிதிக் கொள்கை குழுக் கூட்டம் மும்பையில் இன்று தொடங்கியது.

நடப்பு நிதி ஆண்டில் நடைபெறும் இந்த முதலாவது கூட்டத்தில் ரெப்போ வட்டி விகிதம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்படுகிறது.

பணவீக்கம், பொருளாதார குறியீடுகள் உள்ளிட்ட அம்சங்களின் அடிப்படையில் வட்டி விகிதம் நிர்ணயிக்கப்படும் என தெரிகிறது.

இக்கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் முடிவுகள் நாளை மறுநாள் அறிவிக்கப்படும் என ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

கடற்படை கமாண்டர்கள் மாநாட்டின் இரண்டாவது பகுதி இன்று புதுதில்லியில் தொடங்கியது.

ஆண்டுக்கு இரண்டு முறை நடைபெறும் இந்த மாநாட்டில் கடலோர பாதுகாப்பு, போர் ஆயத்த நிலை, கடற்படையின் நிர்வாக விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் இந்தியாவின் முக்கியத்துவத்தை முன்நிறுத்தும் வகையில் பல்வேறு அம்சங்கள் குறித்து இந்த நான்கு நாள் மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் முப்படை தளபதி ஜெனரல் அனில் சௌகான் பங்கேற்கிறார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தின் எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டுப்பகுதியில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் ராணுவம் செயல்பட்டதாகவும், அதற்கு பதிலடி கொடுத்ததாக இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து அப்பகுதியில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டு, தேடுதல் வேட்டை நடத்தப்படுவதாக ராணுவம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

மக்களுக்கு குறைந்த விலையில் தரமான மருந்துகள் கிடைக்கும் நோக்கில் நாடு முழுவதும் பிரதமரின் மக்கள் மருந்தகங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் தேனி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மக்கள் மருந்தகம் தங்களின் அடிப்படை மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்வதுடன், குறைந்த விலையில் மருந்துகள் கிடைப்பதாக பயனாளிகள் தெரிவித்துள்ளனர்.

*( சவுண்ட்பைட் - பயனாளிகள் ) --- 40 செகண்ட்*

[]<<<>>>[]

கடந்த பத்து ஆண்டுகளில் முன் எப்போதும் இல்லாத வகையில் யோகா உலக அளவில் பிரபலமடைந்து வருவதாக மத்திய ஆயூஷ் துறை இணை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச யோகா தினம் விரைவில் கொண்டாடப்பட உள்ள நிலையில் அதற்கான 75 நாள் கவுண்ட்- டவுன் நிகழ்ச்சியை ஒடிஸா மாநிலம் புவனேஸ்வரில் இன்று அவர் தொடங்கி வைத்தார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில் யோகாவின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தியுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

[]<<<>>>[]

மீனவர்கள் நலனுக்கான மாற்று தொழில்களை ஊக்குவிக்கும் வகையில் மீன்களை பதப்படுத்துதல், உலர்த்துதல் உள்ளிட்ட தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று விதி 110-ன் கீழ் அறிக்கை தாக்கல் செய்து பேசிய அவர், இதன் மூலம் இரண்டாயித்து 500 மீனவ குடும்பங்கள் பயன்பெறும் என்று கூறினார்.

மீனவர்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் ஏற்கனவே அறிவித்தபடி பாம்பன் பகுதியில் 60 கோடி ரூபாய் செலவிலும், தங்கச்சிமடம் பகுதியில் 150 கோடி ரூபாய் செலவிலும் மீன்பிடி துறைமுகங்கள் விரைவில் அமைக்கப்படும் என்று திரு மு க ஸ்டாலின் தெரிவித்தார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் உட்பட பல்வேறு இடங்களில், மாநில அமைச்சர் திரு கே என் நேரு மற்றும் அவரது குடும்பத்தினருக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத் துறையினர் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

அமைச்சர் திரு கே என் நேருவின் சகோதரர் திரு மணிவண்ணனுக்கு சொந்தமான ரீயல் எஸ்டேட் நிறுவனம் தொடர்பாக இந்த சோதனை நடத்தப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்பின் கூடுதல் வரி விதிப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்த 50-க்கும் மேற்பட்ட நாடுகள் தொடர்பு கொண்டுள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்த அமெரிக்க நிதி இமைச்சர் திரு ஸ்காட் பெசண்ட், தைவானில் அமெரிக்க பொருட்கள் மீதான விரியை முற்றிலும் விலக்கிக் கொள்ள அந்நாட்டு அதிபர் முன்வந்துள்ளதாக கூறினார்.

மேலும், தைவான் நாட்டு நிறுவனங்களில் அமெரிக்காவின் முதலீட்டை அதிகரிக்கவும் அவர் விருப்பம் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டார்.

இதனிடையே, அமெரிக்காவின் கூடுதல் வரிவிதிப்பு நடவடிக்கை உலக பொருளாதாரத்தில் புதிய சகாப்தத்திற்கு வழிவகுத்துள்ளதாக இங்கிலாந்து பிரதமர் **Keir Starmer** தெரிவித்துள்ளார்.

அமெரிக்கவின் வரிவிதிப்பு தொடர்பாக ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் மற்றும் ஜெர்மன் பிரதமருடன் ஆலோசனை நடத்திய பின் இதனை தெரிவித்துள்ள அவர், ஐரோப்பாவில் உள்ள பிற நாடுகளின் தலைவர்களுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தி உரிய முடிவுகள் எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

பிரேஸிலில் நடைபெற்ற உலக கோப்பை குத்துச்சண்டை போட்டியில் பதக்கம் வென்ற இந்திய வீரர்களுக்கு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா பாராட்டு தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் இப்போட்டியில் முதல் முறையாக தங்கப்பதக்கம் வென்ற ஹிதேஷுக்கு தனிப்பட்ட முறையில் பாராட்டு தெரிவிப்பதாகவும், அவரது வெற்றி இதர வீரர்களுக்கு ஊக்கம் அளிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மும்பை அணி - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியின் ப்ளே ஆப் சுற்றில் மோகன் பெஹான் அணி - ஷாம்ஷெட்பூர் அணியை இன்று எதிர்கொள்கிறது.

இப்போட்டி கொல்கத்தாவில் இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.